# தேறலின் தெளிவு

அம்மா இந்நாள் அழகே

ஆற்றலின் ஊற்றே உயிரே

என் வாழ்முதலே வணங்குகிறேன்

தீ வெளி காற்றொடு திகழ் நிலம் நீரென

தினமும் மலரும் இயற்கையம்மா

முற்றத்தில் கோலம்செய் முழுவான நிலவும் எம்

சுற்றமும் நீதானே

கற்றது உன்மடியில் காலங்கள் உன் அடியில்

முற்றிலும் நீதானே

வான்பொழி மழையும் வளரலை கடலும்

தாய்தந்தை உறவம்மா

நானுந்தன் பிள்ளை நீயெந்தன் அன்னை

வாழ்வுந்தன் வரமம்மா

கனவிலும் நினைவு தாருங்கள்

மனதிலும் குளிர்வு வரும் பாருங்கள்

நீ தருவாய் என் வாழ்முதல் ஆனவளே

காலைச் செவ்வானத்தின் கதிர் கூடத் தாயே உன்

கருணையின் விழிதானே

கால் சுடும் வெயிலோடும் கடும் கூதல் மழையும் உன்

கடமையின் தொடர்தானே

பார்வையின் ஒளியும் பழகும் நல்லுறவும்

நீ தந்த நேசமம்மா

வெளிச்சமும் பகலும் விளக்குடன் இரவும்

வேருக்குள் ஈரமம்மா

கனவிலும் நினைவு தாருங்கள்

மனதிலும் குளிர்வு வரும் பாருங்கள்

நீ தருவாய் என் வாழ்முதல் ஆனவளே

மாறும் நாள் எந்த நாளும்

ஓயாது முன்னேறும் கடலலை போலுள்ளம்

தீயும் தீபத்தின் ஒளியாகும் பாரும்

தாயின் இருவிழி தன்னில் ஈரம்

கனவிலும் நினைவு தாருங்கள்

மனதிலும் குளிர்வு வரும் பாருங்கள்

நீ தருவாய் என் வாழ்முதல் ஆனவளே

**கருத்து: குழந்தை ம. சண்முகலிங்கம்**

**கவிதை: கவிஞர். நா. சிவசிதம்பரம்**

**இசை: தவநாதன் றெபேட்**

**தயாரிப்பு: சாந்திகம். தை, 2005**